# நெஞ்சில் பூத்த ....

## மேஜர் கஜாளினி

மெல்ல எங்கள் மனங்களைத் தொட்டு? எங்களுக்கு மகிழ்வையூட்டி எங்களுக்குள் ஆழமாகப் பதிந்துவிட்ட போராளி அவள். நீண்ட பயணங்களிலெல்லாம் களைத்து, சோர்ந்துபோன நேரங்களில் உறுதியூட்டி,



சிரிப்பை வரவழைத்து எல்லாவற்றையும் இலகுவாக்கி செய்து முடிக்க வேண்டும் என்று ஊக்கமளித்தவள். அவள் எங்களோடு பழகிய நாட்களில் எங்கள் மனக்கூட்டுக்குள் நிறைந்துபோன நினைவுகள் இவை.

மேஜர் கஜாளினி ஒருவித்தியாசமான போராளி. போராளிகளுடனும் பொது மக்களுடனும் பழகுவதில் கஜாளினி தனித்துவமானவள். 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதி. அவளின் பயிற்சிக்காலம் அவளின் போராட்ட வாழ்வின் ஆரம்ப நாட்கள். அந்த நாட்கள் உற்சாகமாக இருந்தன. கஜாளினி ஒரு திறமையான போராளியாக தன்னை மாற்றிக்கொண்ட காலப்பகுதி அதுதான். பயிற்சி முகாமில் அவளை எல்லோரும் மணி என்றுதான் அழைப்போம். அவளின் கட்டையான உருவமும், அவளின் நடையையும் வைத்து தோழிகள் மணி என்று அழைத்தால் அவளின் முகத்தில் புன்னகை மட்டும் வரும்.

பலாலி இராணுவத்தளத்தைச் சுற்றி 1990ஆம் ஆண்டின் இறுதியில் காவல்நிலைகள் போடப்பட்டபோது கஜாளினியும் அங்குதான் நின்றாள். இதன்போது எதிரியின் 'சினைப்பர்' தாக்குதலால் தொண்டையில் காயம். இந்தக் காயத்தினால் பின்னர் அவள் சில வேளைகளில் திக்கித்திக்கிக் கதைப்ப துண்டு.

தான் கடற்புலிக்குப் போகப்போறேன் என்று கூறி தலைவருக்குக் கடிதம் எழுதிவிட்டு, அவரின் பதிலுக்காக எதிர்பார்த்திருந்த நேரம் நாம் அவளைக் கேலி செய்ததுண்டு.

"நீ தொண்டையில காயப்பட்டு சும்மா கதைக்கேக்கையே திக்கித் திக்கிக் கதைப்பாய். அங்கை கடலுக்கை நீந்திப்போய் 'பொக்கான்' மாதிரித்தான் கிடப்பாய்"என்றால், அவள் சிரித்தபடி சண்டைபிடிப்பாள்.

அவள் அரசியல் வேலை செய்யும்போது மக்கள் மத்தியில் பிரபல்யமானாள்.

மிதிவண்டிகளில் அவள் வெய்யிலும் மழையும் பாராது அவள் அரசியல் வேலை செய்த நாட்கள் மறக்க முடியாதவை. முல்லை மாவட்ட மகளிர் அமைப்பின் பதில் பொறுப்பாளராகக் கடமையாற்றிய காலங்களில் பிள்ளைக ளுக்கும் அவளுக்கும் இடையே மிகுந்த நெருக்கம் இருக்கும். அவளது கதைகளும் அறிவுரைகளும் கூட எம்மை இதமாகத் தடவிவிடும். முகாம் கலகலத்தபடி இருக்கும்.

இவ்வாறுதான், ஒரு முறை பாடசாலையின் கண்காட்சியில் கலந்து கொள்ள இவளுக்கு அழைப்புக் கிடைத்தது. அப்போது அவள் அரசியல் வேலைகளுக்குப் புதிது. மேடைப் பேச்சுக்கும் புதிது. மேடைப்பேச்சு என்றாலே, அச்சமும் நடுக்கமும் கொண்ட அவளைப்பார்க்க ஒரு புறம் சிரிப்பாகவும் பாவமாகவும் இருக்கும்.

இவளை மேடையில் பேசுவதற்குக் கூப்பிட்டார்கள். ஒரு நிமிடம் 'நீ பேசு, நான் பேசேன்' என்று மாறிமாறி விவாதம். ஒருவாறு கஜாளினி மேடையேற வேண்டியதாயிற்று.

மைக்கைப்பிடித்த கைகள் நடுங்கின. பதற்றத்துடன் கொத்தணி அதிபரை வாய்தவறி "குத்துணி அதிபர் அவர்களே" என, நாங்கள் வந்த சிரிப்பை அடக்கப் பெரும்பாடுபட்டோம்.

இதன்பிறகு நாங்கள் எல்லோரும் அவளைக் 'குத்துணி, குத்துணி' என்றே கிண்டல் செய்வோம். அந்த நேரங்களில்

"பொறுங்கோ நான் எப்பிடிப் பேச்சாளர் என்று சொல்லக்கூடிய வகையில் செய்து காட்டுறன்" என்ற சவால் அவளிடமிருந்து வரும்.

1993ஆம் ஆண்டு பூநகரிச் சண்டை யிலும், புலிப்பாய்ச்சல் சண்டையிலும் வழமையான உற்சாகத்துடனேயே நின்று சண்டைபிடித்தாள்.

இதன் பிறகு அவள் தொடர்ச்சியாக சண்டைக்களங்களிலேயே நின்றாள். சூரியக்கதிர் என்ற பெயரில் இராணுவம் யாழ்குடாவைக் கைப்பற்ற எடுத்த நடவடிக்கையை எதிர்த்த சண்டை களிலெல்லாம் அவளும் நின்றாள். ஓயாத எறிகணை மழைக்குள் தப்பி நின்று, சண்டைபிடித்த கணப்பொழுதுகள் மறக்க முடியாதவை.

முல்லைச் சமருக்கும் ஓயாத பயிற்சியின்பின் சென்றாள். வெற்றியோடு மீண்டும்வந்து இன்னொரு களத்துக்குச் செல்லுவேன் என்று அவள் கூறியபடியே, அடுத்த சண்டைக்களமும் உடனேயே அமைந்தது.

முல்லை முகாம்வீழ்ந்த கையோடு தனது இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்ட வேண்டி ஆனையிறவு இராணு வத்தளத்திலிருந்து கிளிநொச்சி நகரைக்கைப்பற்ற சிறிலங்கா இராணுவம் முன்னேறிக்கொண்டிருக்க, அங்கு அணிகள் நகர்ந்தன. கஜாளினி தன்னுடைய அணியுடன் புறப்பட்டாள். தாக்குதல்கள் ஆரம்பமாகின. அந்தச் சண்டை அவளின் இறுதிச் சண்டை. வெட்டைவெளி, இராணுவத்தின் இலக்கு களை நோக்கியதாய் நகர்வு. அன்று எமது அணிகள் இறங்கித் தொடுத்த தாக்குதலில், கஜாளினி, அணியின் பதில் பொறுப்பாளராக முன்னின்று வழிநடத்திச் சென்றாள். பொறுப்பாளர் காயப்பட்டவுடன் அந்தக் கடமையை ஏற்று முன்னுக்குச் சென்றாள்.

டாங்கிகள் சகிதம் எதிரி பெரும்படையாய் முன்னேறி தலைநிமிரமுடியாத எறிகணை களை ஏவ, இறுதிவரை சண்டை பிடித்தாள். இவளுக்கு அடுத்த பொறுப்பாளர் 'உதவி தேவையா' என்று அடிக்கடி வோக்கியில் கேட்க,

'நான் கவனிக்கிறன், சமாளிக்க முடிகிறது' என்ற கடைசிச் சொல்லுக்குப் பிறகு அவளது குரலை நாங்கள் கேட்கவே யில்லை. நெற்றியில் காயப்பட்டு ரவை பின்பக்கத்தால் வந்து இரத்தம் ஆறாய் ஒழுகி 1996.09.26 அன்று கஜாளினி வரவேயில்லை. அதன் பின் நாங்கள் 'குத்துணி' என்று அழைக்கின்ற அவளது குரலைக் கேட்கவே யில்லை. ✷

# மறுக்கப்பட்ட உரிமைகள்; வதைபடும் தமிழர் வாழ்வு

"தை பிறந்தால் வழி பிறக்கும் என்று கூறுவார்கள். தற்பொழுது சமாதானத்தையும் சுபீட்சத்தையும் நோக்கிச் செல்லும் அந்தப் புதிய வழி பிறந்துள்ளது."

இது சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க ஈழத் தமிழர்களுக்கு விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தி.

தை பிறந்து அதன் பின்னர் மாசியும் பிறந்து, இன்று ஆனியும் பிறந்து விட்டது. ஆனால், வவுனியா தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்குத்தான் ஒரு வழியும் பிறக்கக் காணோம்.

பட்டியில் அடைக்கப்பட்டுள்ள ஆடு, மாடுகளைப்போல பாடசாலை மண்டபங்களிலும், களஞ்சியக் கட்டிடங்களிலும், கோழிப்பண்ணைக் கட்டிடங்களிலும் மூச்சுமுட்டத் திணறியபடியே அவர்களில் வாழ்வு கழிகிறது. மறுபக்கம் திரும்பிப் படுக்க முடியாதளவு இடநெருக்கடி நிலவுகிறது. ஏராளமான மக்கள் ஓரிடத்தில் குவிந்திருந்தால் இயல்பாகவே பாதிப்படைகின்ற சுற்றுச் சூழலிலிருந்து பெருகுகின்ற கொடிய நுளம்புகளின் தொல்லை தாங்கமுடியாது. நிம்மதியாகத் தூங்கமுடியாத இரவுகள். பெண் – ஆண் வேறுபாடுகளின்றி காலைக் கடன்களை நிறைவேற்றுவதற்காக மணித்தியாலக் கணக்கில் மூக்கைப் பொத்தியவாறு காத்திருக்க வேண்டியு ள்ளது.

தடைமுகாம்களில் போதிய மருத்துவ வசதி சிறிலங்கா அரசால்



செய்துகொடுக்கப்படாததால் குழந்தை களிலிருந்து முதியவர்கள்வரை மலேரியா, நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம் என்பவற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு மயங்கித் துவண்டுபோய் கிடப்பதைவிட வேறு வழியில்லை. பிரசவ வேதனையால் துடிக்கும் தாய்மார் சுற்றிக்கட்டிய சேலை மறைப்பின் நடுவே குழந்தையைப் பெற்றெடுக்கின்ற அவலமும் தொடர்கின்றது. சொந்த ஊரில் எப்படி எப்படியெல்லாமோ வாழ்ந்து வாழ்வின் இறுதிக்கணங்களை தூரத்தே வாழும் தன் பிள்ளைகளுடன் கழிக்கவென வந்து, தடைமுகாமில் துன்பத்துக்கு மத்தியில் கண்ணை மூடுகின்ற முதியவர்களின் கடைசி ஆசைகளெல்லாம் காற்றிலே கரைகின்றன.

நோயால் துடிக்கும் பலரில் ஒருவர், இருவர் இராணுவத்தினரால் வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்படுகின்றனர். இதுகூட வெறும் கண்துடைப்பு நடவடிக்கைதான். கண்டும் காணாததுபோல் இராணுவம் அலட்சிய மாக இருப்பதும் இராணுவத் தினரின் காலைப் பிடித்துக் கெஞ்சியும் பயனில்லாமல் பல உயிர்கள் பரிதாபமாகப் போய்ச் சேர்ந்துவிட்டன.

கடந்த நவம்பர் மாதம் 18ஆம் திகதி ஜீவன் பவளரதி (வயது 25) என்பவர் தடைமுகாமில் இறந்த குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார். தாயின் வயிற்றிலேயே அந்தப் பிஞ்சு இறக்கக் காரணம் இராணுவத்தினரின் பாராமுகமே ஆகும்.

பத்து வயதுச் சிறுமியான நித்தியானந்தன் கெற்சியா என்பவர் செப்ரிசீமியாவினால் பாதிக்கப்பட்டார். இவரை வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்ல அவரது பெற்றோர் எடுத்த முயற்சிகள் யாவும் இராணுவத்தினரால் நிராகரிக்கப்பட்டன. உயிர் பிரியும் இறுதிக்கட்டத்தில் அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் இருநாட்களுக்கு முன்னர் மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் உயிர் பிழைத்திருப்பார் என்று கூறினார்கள்.

இதேபோல, இழுப்பு நோயினால் பாதிக்கப்பட்ட முதியவர் ஒருவர் யாருடைய உதவியுமே இல்லாத நிலையில் உயிரை விட்டுள்ளார். இவை

தொடர்ச்சி 12 ம் பக்கம்...